திரு. கே. பண்ணை சேதுராம்: நம்முடைய தமிழ் நாடு சட்டமன்றத்திற்குள்ளே இருக்கிற நூலகத்தில் எல்லா பத்திரிகைகளும் தினசரி பத்திரிகைகளும் சரியாக வந்து கொண்டிருக்கின்றன. இங்கே அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சிக்கிற. .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் எழுத்து மூலமாக, விதிகளைச் சுட்டிக்காட்டித் தந்திருக்கிறீர்களா? . . . . . .

திரு. கே. பண்ணை சேதுராம்: பாயின்ட் ஆஃப் கிளாரிஃபிகேஷன், பாயின்ட் ஆஃப் ஆர்டர். அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சனம் செய்கின்ற முரசொலி, அலை ஓசை போன்ற பத்திரிகைகள் எல்லாம் சரியாகப் போடப்பட்டு, இங்கே உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில், அரசாங்கத்தினுடைய செயல்கள் அத்தனையையும் மக்களுக்கும் உறுப்பினர்களுக்கும் கொடுக்கின்ற 'நீதியின் குரல் சென்ற முறை உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த முறை அது நிறுத்தப்பட்டிருக்கிறது. எக்காரணம் என்பதை நான் சபாநாயகர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

திரு. க. சுப்பு: இதே பத்திரிகை மீது ஏற்கனவே சட்டமன்றத்தில் பேசி, முதலமைச்சர் நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னார். அந்த அடிப்படையில் நிறுத்தப்பட்டிருக்கிறது என்று நான் அறிகிறேன். அதைப் பற்றி ஏன் அவர் கேள்வி கேட்கிறார் என்று புரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் உறுப்பினர் அவர்கள் என் அறையில் வந்து சந்தித்து அதைப்பற்றி விவாதிக்கக் கோருகிறேன்.

II. பேரவை அலுவல் சிறிது நேரம் ஒத்திவைப்பு— உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியின் பதவி ஏற்பு குறித்து.

திரு. பி. எச். பாண்டியன்: நாளைய தினம் நம்முடைய சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. எம். எம். இஸ்மாயில் தலைமை நீதிபதியாக பதவியேற்க இருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அழைப்பிதழ்கள் வந்திருக்கின்றன. காலை 10.45 மணிக்கு அந்த வைபவம் இருக்கிற காரணத்தால், நாளைய தினம் சட்டசபை ஒத்தி வைக்கப்படுமா? இல்லாவிட்டால். . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன், இது அல்ல முறை. தாங்கள் பேரவைத் தலைவரை அணுகி, இந்த அலுவல் ஆய்வுக் குழுவிலே, மாண்புமிகு முதலமைச்சரையும் பேரவை முன்னவரையும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரையும் அணுகி, அதற்கான

1979 நவம்பர் 5] [பி. எச். பாண்டியன்]

ஏற்பாடுகளைச் செய்யுங்கள் என்று எனக்கு எழுத்து மூலமாகத் தந்திருந்தால் அது முறை. இங்கே வந்து எழுப்புவது என்பது விதிகளின் படியும் ஏற்றுக் கொள்ளக் கூடாத ஒன்று.

ஈ. கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்வது குறித்து.

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான பொருள்கள் குறித்து 41-வது விதியின் கீழே, பல தீர்மானங்களைத் தந்திருக்கிறோம். . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை நாளைக்கு எடுத்துக் கொள்கிறோம். நேற்றைய முன்தினமே பேராசிரியர் சொல்லி, இன்றைய விவாதத்திற்குப் பிறகு அதைப்பற்றியெல்லாம், நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது உங்களுடைய 41-வது விதியின்கீழ் கொடுக்கப்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானம் என் கைக்கு வந்திருக்குமானால், இந்த அவையிலே வைத்திருப்பேன். வந்ததா, இல்லையா என்று என் அறையிலே வந்து கேட்டால், விளக்கமாகச் சொல்வேன்.

திரு. க.உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரம் முடிந்தவுடனே, சட்டசபையினுடைய இதர அலுவல்கள் ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே பல்வேறு உறுப்பினர்கள் இங்கே ஒழுங்குப் பிரச்னைகள் எழுப்பியிருக்கிறார்கள். பாய்ன்ட் ஆஃப் ஆர்டர் என்ற பெயராலே, விதிகளின் பிரகாரம், பாய்ன்ட் ஆஃப் ஆர்டர் என்றாலே If any order of the proceedings goes wrong அவ்வளவுதான். நடைமுறைகளிலே ஏதாவது தவறுகள் ஏற்படுமேயானால் அப்பொழுது பாய்ன்ட் ஆஃப் ஆர்டர் எழுப்ப வேண்டுமென்று விதிமுறைகள் இருக்கின்றன. நம்முடைய சட்டமன்ற விதி 83, கிளாஸ் (3)

"A point of order shall relate to the interpretation or enforcement of these rules or such articles of the Constitution as regulate the business of the House and shall raise a question which is within the congnizance of the Speaker"

என்று மிகத் தெளிவாக இருக்கிறது. கேள்வி நேரம் முடிந்த உடனே, நீங்கள் அடுத்த ஒரு பிரச்னைக்குப் போவதற்கு முன்னாலேயே நான் அதைக் கொடுத்திருக்கிறேன், இதைக் கொடுத்திருக்கிறேன், இதை ஏன் எடுக்கவில்லையென்று மாண்புமிகு உறுப்பினர்கள் பாய்ன்ட் ஆஃப் ஆர்டர் எழுப்புவது சட்டமன்றத்திலே சர்வ சாதாரணமான காரியமாக இருக்கிறது. ஆகவே, அதற்குத்தாங்கள் ஒரு முடிவு கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.